**காரைக்குடி நகராட்சி**
**11.05.2018 ம் தேதி நடைபெற்ற அவரசக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**
**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **11.05.2018** | **1** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மான எண். 16 அ பதிவு செய்யப்பட்டது |
| | **2** | இந்நகராட்சி 2018–2021 ஆம் ஆண்டு ஏல குத்தகை இனங்களில் கழனிவாசல் செக்காலை ரோடு ஆடுவதை செய்யும் இனத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2018, 07.02.2018, 22.02.2018, 07.03.2018, 16.03.2018, 28.03.2018, 25.04.2018, 03.05.2018 மற்றும் 11.05.2018 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏல தேதிகளில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை கழனிவாசல் செக்காலை ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆடுவதை செய்யும் இடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 11.05.2018 அன்று மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண். 16 ஆ அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |

| வ .எண். | ஏலதேதி | இனம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஆண்டு 1–க்கு ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 11.05.2018 | கழனிவாசல் செக்காலை ரோட்டில் ஆடுவதை செய்யும் இடத்தில் தினசரி கட்டணம் வசூல் | திரு.பி.வேலு 13, வைத்தியலிங்கபுரம் | ரூ.350500/– (ரூ.மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்து |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td></td><td>2வது வீதி,<br>காரைக்குடி</td><td>ஐந்நூறு மட்டும்)</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
மேற்படி இனத்திற்கு திரு.பி.வேலு என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,50,500/—க்கு சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.467250/— யை விட குறைவாகவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.387249/— யை விடக் குறைவாக உள்ளது. இவ்வினத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் ஏலம் போகாததால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறை மூலம் வசூல் செய்ததில் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ.49925/— வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு ஆண்டு குத்தகையாக துறைமூலம் வசூல் செய்வதால் ஆண்டு சராசரி குத்தகைத் தொகையாக ரூ.599100/— வசூல் ஆகும் இவ்வினத்திற்கு ஒரு வருடத்திற்கு வசூல் செய்வதற்கு பணியாளர் செலவினத்திற்கு ரூ.324072/— மின் கட்டணம் ரூ.12000/— மற்றும் வருமானவரி மற்றும் டிக்கெட் புக் செலவினமாக ரூ.16982/.ம் சேர்த்து மொத்தம் ரூ.353054/— செலவு ஏற்படுகிறது. மேற்படி துறைமூலம் வசூல் செய்யப்படும் மொத்த சராசரி குத்தகை தொகை ரூ.599100/—ல் நிர்வாக செலவினங்கள் பணியாளர் செலவினம் மற்றும் இதர செலவினங்களை சேர்த்து மொத்தம் ரூ.353054/— போக நகராட்சி நிகர குத்தகை தொகையாக ரூ.246046/— உரிமத் தொகையையாக உள்ளது. எனவே திரு.பி.வேலு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.350500/—யை ஏற்று குத்தகை உரிமம் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>3</td>
<td>
இந்நகராட்சி 2018—2021 ஆம் ஆண்டு ஏல குத்தகை இனங்களில் முடிரசன் சாலையில் உள்ள நவீன நுழைவு கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2018, 07.02.2018, 22.02.2018, 07.03.2018, 16.03.2018, 28.03.2018, 25.04.2018, 03.05.2018 மற்றும் 11.05.2018 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏல தேதிகளில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. முடியரசன் சாலையில் உள்ள நவீன பூங்கா நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 11.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ .எண்.</th><th>ஏலதேதி</th><th>இனம்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஆண்டு 1—க்கு ஏலத்தொகை</th></tr>
<tr><td>1</td><td>11.05.2018</td><td>முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூங்கா வசூல்</td><td>திரு.கே.பி.முனிச்சாமி 1/348 சூரக்குண்டு (Po)</td><td>ரூ.7,70,000/— (ரூபாய் ஏழு இலட்சத்து</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 17 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம் | எழுபதாயிரம் மட்டும்) |
| 2 | 11.05.2018 | முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூங்கா வசூல் | திரு.கே.சுந்தரபாண்டியன் 56/1 சாமிநாதன் தெரு, செக்காலை, காரைக்குடி | ரூ.8,08,000/— (ரூ.எட்டு லட்சது எட்டாயிரம் மட்டும்) |

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரரில் திரு.கே.சுந்தரபாண்டியன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,08,000/—க்கு சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.1531248/— யை விட குறைவாகவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.1265426/— யை விடக் குறைவாக உள்ளது. இவ்வினத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் ஏலம் போகாததால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறைமூலம் வசூல் செய்ததில் 01.04.2018 முதல் 30.04.2018 வரை ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ.166105/— வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு ஆண்டு குத்தகையாக துறைமூலம் வசூல் செய்வதால் ஆண்டு சராசரி குத்தகைத் தொகையாக ரூ.1993260/—— வசூல் ஆகும். இவ்வினத்திற்கு ஒரு வருடத்திற்கு வசூல் செய்வதற்கு நகராட்சி பணியாளர் செலவினத்திற்கு ரூ.1026048/— மின் கட்டணம் ரூ.12000/— மற்றும் வருமானவரி மற்றும் டிக்கெட் புக் செலவினமாக ரூ.49865/ம் சேர்த்து மொத்தம் ரூ.1195913/— செலவு ஏற்படுகிறது. மேற்படி துறைமூலம் வசூல் செய்யப்படும் மொத்த சராசரி குத்தகை தொகை ரூ.1993260/—ல் நிர்வாக செலவினங்கள் பணியாளர் செலவினம் மற்றும் இதர செலவினங்களை சேர்த்து மொத்தம் ரூ.1195913/— போக நகராட்சி நிகர குத்தகை தொகையாக ரூ.797347/— உரிமத் தொகையாக உள்ளது. எனவே திரு.கே.சுந்தரபாண்டியன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,08,000/—யை(எட்டு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) ஏற்று குத்தகை உரிமம் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி

**காரைக்குடி நகராட்சி**
**31.05.2018 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**
**மன்றப் பொருட்கள்**

<table>
<tr><th>Date of meeting of the council</th><th>S.No.</th><th>Subject in the Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>31.05.2018</td><td>1</td><td>இந்நகராட்சி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் பிற பணிகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>விளம்பர விபரம்</th><th>விளம்பரம் செய்த நாளிதழ்/ நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>காரைக்குடி நகராட்சியில் குடிநீர் விநியோகம் பணியினை ஓராண்டிற்கு பேணுதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியது</td><td>மக்கள் குரல் 01.04.2018</td><td>ரூ.84,704/–</td></tr>
</table>
<br>மேற்கண்ட பட்டியலின்படி தொகை ரூ.84,704/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 18<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2 | இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண். TN63R5566-க்கு செல்ப் மோட்டார், ஸ்டேரிங் எண்டு பால் பேக் வீல் சிலிண்டர், பேக் வீல் ஆர்ச் டோர் லாக், இஞ்சின் ஆயில், கிரவுன் ஆயில் கியர் ஆயில், பவர் ஸ்டேரிங் பெல்ட் ஆகிய பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.24,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண். 19<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது. |
| | 3 | காரைக்குடி நகராட்சி கலவை உரக்கிடங்கு மற்றும் இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும், பிளாஸ்டிக் ரப்பர் மற்றும் எரியக் கூடிய பொருட்கள் அனைத்தும் அல்ட்ராடெக் சிமெண்ட் கம்பெனி அரியலூார் என்ற நிறுவனம் தங்களது நிறுவனத்திற்கு எரிபொருளாக பயன்படுத்தி கொள்ள இந்நகராட்சியிடம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன்படி இக்கழிவுகளை அல்ட்ராடெக் நிறுவனத்திற்கு கொண்டு செல்வதற்கு இந்நகராட்சியில் போதிய வாகன வசதியில்லை. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்கள் மட்காத மற்றும் எரியக் கூடிய கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தும் பொருட்டு வெளியில் லாரி வாடகைக்கு அமர்த்தி கொள்ள அறிவுறுத்தி உள்ளதின் பேரில் முதல் கட்டமாக பத்து லோடுகள் லாரியினை வாடகைக்கு அமர்த்தவும், அதற்கான தோராய செலவு ரூ.90000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் முன் அனுமதியின் பேரில் தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 20<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 4 | இந்நகராட்சி பொறியில் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண். TN63AV5823-க்கு வாகன காப்பீடு 23.05.2018–ல் முடிவடைவதால் அதனை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை ரூ.16,131/–ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 21<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது |
| | 5 | இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண். TN63T 3333-க்கு வாகன காப்பீடு 23.05.2018–அன்று முடிவடைவதால் அதனை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், காரைக்குடி நிறுவனத்திடம் புதுப்பிக்க அதற்கு ஆகும் செலவின தொகை ரூ.11841/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 22<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது |
| | 6 | நகராட்சி பகுதிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்கள் ( சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள் 25.01.2018–ல் வெளியிடப்பட்டும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள் 15.03.2018–ல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.390 நாள் 28.03.2018–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனத் கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்வது சம்மந்தமான ஆட்சேபணை ஏதுமிருப்பின் அதனை தெரிவிக்கக்கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. The Correspondent, Kamban karpagam Matriculation Higher Secondary School, Karaikudi அவர்களது 09.05.2018 தேதிய கடிதத்தில் கல்வி நிறுவனத்திற்கு வரிவிதிப்பு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவித்து மனு வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண். 23<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>அலுவலக்குறிப்பு<br>1.கம்பன் கற்பகம் மெட்ரிக்குலேசன் பள்ளி சுயநிதி கல்வி நிறுவனமாக இருப்பதால் மேற்படி ஆட்சேபணை மனு நிராகரித்து மனு தள்ளுபடி செய்யலாம்.<br>2.நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அனைத்து அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1213/2018/அ2)</td><td></td></tr>
<tr><td></td><td>7</td><td>அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.01.1999–ன்படி நகராட்சி பகுதியில் தொழில் புரிவோர் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிவோருக்கும் தொழில்வரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124(4) ஆணை பிரிவு 13–ன்படி தொழில்வரியினை திருத்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள கீழ்கண்டவாறு உள்ள தொழில்வரியை 25 சதவீதத்திற்கு குறையாமல் 35 சதவீதத்திற்கு அதிகமாகமலும் தொழில்வரி திருத்தம் செய்து 01.10.2018 முதல் அமுலாக்கம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.<br><table><tr><td>வ.எண்</td><td>சராசரி 6 மாத வருமானம்</td><td>ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி (ரூபாய்)</td><td>01.10.2018 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொழில்வரி ரூ</td></tr></table></td><td>தீர்மான எண். 24<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>8</td><td>பொதுப் பிரிவில் கணினி அறையில் உள்ள Ricoh MP -1600 le- Xerox Machine பழுது அடைந்து பிரிண்ட் மற்றும் ஜெராக்ஸ் எடுக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி அலுவலகப் பணியின் சிவம் காப்பியர்ஸ் காரைக்குடி நிறுவனம் மூலம் உடனடியாக பழுது நீக்கம் செய்ததற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.1500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்படி தொகை ரூ.1500/–யை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 25<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 9 | இந்நகராட்சி வார்டு எண்.34–ல் வைத்தியலிங்கபுரம் பெரியார் நகர் புதிய ஆழ்குழாய் கிணறு 5HP நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.14,386/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண். 26<br>அனுமதிக்கப்பட்டது. |
| | 10 | இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு எண்.9–ல் 15HP நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் இயங்கல்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி அதனை உடன் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.8602/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 27<br>அனுமதிக்கப்பட்டது |
| | 11 | இந்நகராட்சி வார்டு எண்.1–ல் ஓ.சிறுவயல் ஆழ்குழாய் கிணறு எண்.II–ல் உள்ள 20HP நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் இயங்கல்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.8602/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 28<br>ஏற்கப்பட்டது |
| | 12 | காரைக்குடி நகராட்சி பகுதிகளில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி, இந்நகர் பகுதியில் கழிப்பறை இல்லாத வீடுகள் பற்றிய மறுக்கணக்கெடுப்பு, இந்நகராட்சி பரப்புரையாளர்களால் ( Animators) எடுக்கப்பட்டு, அதில் 204 வீடுகள் கழிப்பறை கட்ட இடவசதி உள்ளவை, மற்றும் 94 வீடுகள் இடவசதி இல்லாத வீடுகள் எனவும் கண்டறியப்பட்டு, இதில் 204 வீடுகளிலும் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் கழிப்பறை கட்டுவதற்கு விண்ணப்ப | தீர்மான எண். 29<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன. |

<table>
<tr><td></td><td>13</td><td>திண்டுக்கல் மாநகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. சா.அருள்முருகன் தனது மனைவியின் உடல் நிலை மற்றும் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக காரைக்குடி நகராட்சியில் உதவியாளர் பணியிடத்திற்கு பணி மாறுதல் செய்யும்படி கோரி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படியாரின் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2728/2018/சி1)</td><td>தீர்மான எண். 30<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>14</td><td>காரைக்குடி நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளிலிருந்து எரிப்பதற்கு பயன்படக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகள் , பேப்பர் கழிவுகள், பிளாஸ்டிக் கப்புகள், துணிக்கழிவுகள், டயர்கள் மற்றும் எரியக்கூடிய அனைத்து கழிவுப் பொருட்களையும் எரிபொருளாக பயன்படுத்துவதற்கு விலையில்லாமல் அவர்களது சொந்த வாகனத்தில எடுத்துக் கொள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் அரியலுார் அவர்கள் கோரியுள்ளதன்பேரில், அதன்படி அந்நிறுவனத்தாருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 10 ஆண்டு காலத்திற்கு ஏற்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1.அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 31<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>15</td><td>இந்நகராட்சி வருவாய் நிதி 2018–2019ன் கீழ் ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி வாகன எண். TN-63, AX 7205 வாகனத்திற்கு தகுதி சான்று பெற்றிட உரிய பணிகள் செய்தல் பணிக்கு 27.04.2018–ல் நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 31.05.2018– அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><table><tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr><tr><td>1</td><td>M/s வாம்பேக்ஸ் ஃபேக்ஸ், கோவை</td><td>மதிப்பீட்டை விட 1.95 % குறைவு</td></tr><tr><td>2</td><td>M/s சத்தி பாடி ஒர்க்ஸ், சென்னை</td><td>மதிப்பீட்டை விட 0.59 %அதிகம்</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s வாம்பேக்ஸ் ஃபேக்ஸ், கோவை என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 1.95 % குறைவாக உள்ளது. எனவே</td><td>தீர்மான எண். 32<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | **16** | இந்நகராட்சி வார்டு எண்.8 செக்காலை ரோடு, வார்டு எண்.19 வள்ளலார் குறுக்கு தெரு மற்றும் வார்டு எண்.22 வ..உ.சி பிரதான சாலை ஆகிய இடங்களில் குடிநீர் விநியோகத்திற்காக கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சி.ஐ. பகிர்மானக் குழாய் முழுவதிலும் அரிமானம் ஏற்பட்டதால் குடிநீர் உட்புறம் முழுவதிலும் மண் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் செல்ல முடியாது நிலை உள்ளது. அதனால் மேற்கண்ட பகுதிகளில் பழுதடைந்த சி.ஐ பகிர்மானக் குழாய்களுக்கு பதிலாக புதிதாக PVC பகிர்மானக் குழாய் பதித்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 33<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது. |
| | **17** | இந்நகராட்சியில் வார்டு எண்.13–ல் சோமுபிள்ளை தெருவில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த 5 எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் பழுதடைந்துவிட்டதால் அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்திட இயலவில்லை. எனவே, மேற்கண்ட மின்மோட்டாருக்கு பதிலாக புதிய 5எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் வாங்கி பொருத்திட ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 34<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>18</td>
<td>இந்நகராட்சியில் உள்ள திருச்சி சாலை OHT, சுப்பிரமணியபுரம் OHT, செஞ்சை OHT மற்றும் சூடாமணிபுரம் OHT வளாகத்தில் உள்ள காவலர் அறையில் மின்வசதியில்லததால் புதியதாக மின் இணைப்பு பெறவும் மற்றும் குழல் விளக்குகள், மின்விசிறி ஆகியவை அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.30 (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாரயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>1,மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 35<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>19</td>
<td>இந்நகர் வார்டு எண்.23, கதவு எண்.6/1 6/2 6/3 6/4 என்ற சொத்தில் பி.எஸ்.என்.எல் கட்டிடம் இயங்கி வருகிறது. மேற்படி BSNL நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டதால் மேற்படி நிறுவனம் இயங்கிவரும் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து சுற்றறிக்கை பெறப்பட்டு, அதன்படி மேற்படி கட்டிடத்திற்கு சொத்திற்கு கீழ்க்கண்டவாறு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><td>வரிவிதிப்பு எண்.</td><td>கட்டிட விபரம்</td><td>வரிவிதிப்பு செய்யப்பட்ட ஆண்டு</td><td>அரையாண்டு வரித் தொகை</td><td>கதவு எண்கள்</td></tr>
<tr><td>25797</td><td>BSNL</td><td>2004–2005 முதல்</td><td>84872</td><td>6/1</td></tr>
<tr><td>25789</td><td>BSNL</td><td>2004–2005 முதல்</td><td>63568</td><td>6/2, 6/3</td></tr>
<tr><td>25799</td><td>BSNL</td><td>2004–2005 முதல</td><td>12108</td><td>6/4</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>160548</td><td></td></tr>
</table>
மேற்படி, பி.எஸ்.என்.எல் நிறுவனத்திற்கு வரிவிதிப்பு எண்.25797, 25798 மற்றும் 25799 கதவு எண். 6/1, 6/2, 6/3, 6/4 என மூன்று வரிவிதிப்புகள் வார்டு எண்.23–ல் 2010–2011ம் ஆண்டைய மாதாந்திர பட்டியலில் 2004–2005 முதலாம் ஆண்டு முதல் என முன் தேதியிட்டு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.<br>அதே கட்டிடத்திற்கு BSNL நிறுவனத்திற்கு 2015–2016ம் ஆண்டு மாதாந்திர பட்டியல் வார்டு 23–ல் வரிவிதிப்பு எண்கள் 25904 மற்றும் 25905, கதவு எண்.6/1, 6/2, 6/3 என மூன்று கதவு எண்களுக்கு சேவை வரி 2009–2010 இரண்டாம் அரையாண்டு முதல் சேவைவரிக்கான கேட்பு கீழ்க்கண்டாவறு எழுப்பப்பட்டுள்ளது.</td>
<td>தீர்மான எண். 36<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>111/25904</td><td>BSNL( Service Tax)</td><td>2009–2010 முதல</td><td>14737</td><td>6/1</td></tr>
<tr><td>111/25905</td><td>BSNL( Service Tax)</td><td>2009–2010 முதல</td><td>1170</td><td>6/2, 6/3</td></tr>
</table>
ஆனால் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி விதிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுரைப்படி சொத்துவரி வரிவிதிப்பு எண்கள் 25797, 25789, 25799–ஐ வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கவும் சேவைவரி விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண்.111/25904, 111/25905 ஆகிய வரிவிதிப்புகளை ரத்து செய்து 2009–10 முதல் கேட்பு எழுப்பப்பட்ட தொகை ரூ.303913 /–ஐ ரத்து செய்யவும், மேற்படி நிலுவைத் தொகையை கேட்பில் இருந்து நீக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்குறிப்பு<br>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>20</td>
<td>TURIP -2017-2018 திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைதிட்டப் பணி முடிவுற்ற சுப்பிரமணியபுரம் வடக்கு 2, 3, 4, 5 மற்றும் 6–ம் வீதிகளில்சாலையை மேம்பாடு செய்து தார்தளம் அமைத்திட 19.12.2017–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 30.45% குறைவாக கொடுத்த திரு.டி.செந்திகுல்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மான எண்.371 நாள் 28.02.2018ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நீதிமன்றம், அம்மா உணவகம், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், மருத்துவமனைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள மற்றும் பேருந்துகள் செல்லும் சுப்பிரமணியபுரம் தெற்கு 1 மற்றும் 2–ம் வீதி சாலைகளில் தற்போது பாதாள சாக்கடை முடிவுற்றுள்ளன. வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள இந்த சாலைகளின் முக்கியத்துவத்தைத் கருதியும், பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காகவும் மேற்கண்ட சாலைகளை உடனடியாக மேம்பாடு செய்து தார்தளம் அமைத்திட வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட திட்டப்பணியில் ஒப்பந்தப்புள்ளி சதவிகித குறைவினால் ஏற்படும் சேமிப்பு தொகையை கொண்டு அதே ஒப்பந்த விகிதத்தில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் சுப்பிரமணியபுரம் தெற்கு 1 மற்றும் 2–ம் வீதிகளில் சாலையை மேம்பாடு செய்து தார்தளம் அமைக்கும் பணியை செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்குறிப்பு<br>
முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த சதவிகித குறைவு விலையின் அடிப்படையில் கூடுதல் பணி செய்வதாலும், அரசின் திட்ட நிதியை முழுவதும் பயன்படுத்திடவும் இப்பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண். 37<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்க்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 21 | 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை திட்டம் – 2017–2018ன் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவுற்ற 100 அடி சாலையில் செக்காலை வீதி முதல் டி.டிநகர் 4ம் குறுக்கு வீதி வரை உள்ள சாலையை மேம்பாடு செய்து தார்தளம் அமைத்திட 19.12.2017–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 29.10% குறைவாக கொடுத்த திரு.வி.மலையாண்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மான எண்.372, நாள் 28.02.2018ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நீதிமன்றம், அம்மாஉணவகம், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், மருத்துமனைகள். நகராட்சி அலுவலகம் மற்றும் வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள மற்றும் பேருந்துகள் செல்லும் முடியரசன் சாலையில் தற்போது பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன. வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள இந்த சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருதியும், பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காகவும் மேற்கண்ட சாலைகளை உடனடியாக மேம்பாடு செய்து தார்தளம் அமைத்திட வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட திட்டப் பணியில் ஒப்பந்தப்புள்ளி சதவிகித குறைவினால் ஏற்படும் சேமிப்புத் தொகையை கொண்டு, அதே ஒப்பந்த விகிதத்தில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் முடியரசன் சாலையை மேம்பாடு செய்து தார்தளம் அமைக்கும் பணியை செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த சதவிகித குறைவு விலையின் அடிப்படையில் கூடுதல் பணி செய்வதாலும், அரசின் திட்ட நிதியை முழுவதும் பயன்படுத்திடவும் இப்பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 38<br>அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | **22** | 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை திட்டம் – 2017–2018ன் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவுற்ற 100 அடி சாலையில் முடியரசன் சாலை முதல் டி.டி. நகர் 4ம் குறுக்கு வீதி வரை உள்ள சாலையை மேம்பாடு செய்து தார்தளம் அமைத்திட 19.12.2017–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 29.10% குறைவாக கொடுத்த திரு.வி.மலையாண்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மான எண்.372, நாள் 28.02.2018ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நீதிமன்றம், அம்மா உணவகம், மருத்துவமனைகள், நகராட்சி அலுவலகம் மற்றும் வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள மற்றும் பேருந்துகள் செல்லும் முடியரசன் சாலையில் தற்போது பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன. வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள இந்த சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருதியும், பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காகவும் மேற்கண்ட சாலைகளை உடனடியாக மேம்பாடு செய்து தார்தளம் அமைத்திட வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட திட்டப் பணியில் ஒப்பந்தப்புள்ளி சதவிகித குறைவினால் ஏற்படும் சேமிப்புக் தொகையை கொண்டு, அதே ஒப்பந்த விகிதத்தில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் முடியரசன் சாலையை மேம்பாடு செய்து தார்தளம் அமைக்கும் பணியை செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த சதவிகித குறைவு விலையின் அடிப்படையில் கூடுதல் பணி செய்வதாலும், அரசின் திட்ட நிதியை முழுவதும் பயன்படுத்திடவும் இப்பணியை மேற்கொள்ள ளன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண். 39<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்க்கப்பட்டது |
| | **23** | இந்நகராட்சி வார்டு எண்.1–ல் உள்ள நாடார் குடியிருப்பு (இரட்டை குளம்) அருகில் உள்ள ஆழ்குழாய் கிணறு 15 HP நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.30951/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண். 40<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்க்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>24</td>
<td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பொதுப் பணிகளுக்கு E Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோர அலுவலகப் பணிக்கு Digital Identry Card வாங்கப்பட்டது. அதற்கான செலவினத் தொகை ரூ.2600/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 41<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்க்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>25</td>
<td>.நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.23651/2013/DO1 நாள் 22.03.2018—ல் குடிநீர் விநியோக பணியினை ஒரு ஆண்டிற்கு பேணுதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள ரூ.71.82 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 24.04.2018—அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. திரு.ஜி.முத்துகிருஷ்ணன், கடலூார்<br>2.திரு.ஆர்.விஷ்வநாதன், சேலம்<br>3.கே.எம்.இண்ஜினியரிங் எண்டர்பிரைசர்ஸ், சென்னை<br>மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் Technical bid price bid கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகளின் அடிப்படையில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் , மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் price bid திறக்கப்பட்டு, அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு
<table>
<tr><th>வ.எண்.</th><th>பெயர்</th><th>ஒப்பந்த சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஜி.முத்துகிருஷ்ணன், கடலூார்</td><td>மதிப்பீட்டைவிட 5.10 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.விஸ்வநாதன், சேலம்</td><td>மதிப்பீட்டைவிட 2.76 % குறைவு</td></tr>
<tr><td>3</td><td>கே.எம்.இண்ஜினியரிங் எண்டர்பிரைசர்ஸ், சென்னை</td><td>மதிப்பீட்டைவிட 0.75 % குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஜி.முத்துகிருஷ்ணன், கடலூார் அவர்கள் கொடுத்துள்ள</td>
<td>தீர்மான எண். 42<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்க்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5.10 % குறைவாக உள்ளதால் அதனை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி